**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.495/2021**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கிராமகிருஷ்ணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 25th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஏ.பி.நாடானூரில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்திற்கு பிறகு என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. அதற்கு முன்பு பால் வியாபாரம் செய்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். 01.09.2018 ம் தேதி, மதியம் 02.30 மணியளவில், நானும், எனது அத்தான் சேர்மனும் பால் கறந்து விட்டு, பிளாட்டினா இருசக்கரவாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். குத்தபாஞ்சான் பிள்ளையார் கோவில் அருகே வந்து கொண்டிருந்தபோது, எதிரிகள் செல்லக்குட்டி மற்றும் கெவிலிக்குமார்(இறப்பு) வழிமறித்து தடுத்து நிறுத்தி, "தேவடியா, மவனே, புண்டா மவனே, சிறுக்கிபுள்ள" என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, "உன்னாலத் தான் என்னுடைய தொழிலே நஷ்டமாக இருக்கு, உன்னை வெட்டி கொன்னுட்டா, எந்த பிரச்சனையும் இல்ல," என்று பேசிக்கொண்டிருக்கும் போதே எதிரி கெவிலிக்குமார் அரிவாளால் எனது அத்தான் சேர்மனை வெட்ட போவதாக சொன்னார், எனது அத்தான் அரிவாளை பார்த்தவுடன் பயந்து 10 அடி பின் வாங்கினார்.

நான் அதை பார்த்து கொண்டிருந்தபோது, எதிரி செல்லக்குட்டி "இவனும் அவன் கூடத்தான் பால் கறக்கிறான், இவன முதலில் வெட்டி கொன்றுவிடுவோம், அப்போது தான் அவன் சரிபட்டு வருவான்". என்று சொன்னார். உடனே எதிரி கெவிலிக்குமார் முதுகுக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து, என்னை கழுத்தை நோக்கி வெட்டினார். நான் எனது இடது கையால் அதை தடுத்தேன். அதில் எனது இடது முன்கை துண்டாகி விட்டது. மீண்டும் வலது கையால் தடுக்கும் போது, அதில் எனது வலது கை பெருவிரலில் அரிவாள் பட்டு காயம் ஏற்பட்டது. துண்டான முன் கையை ஒரு கவரில் ஐஸ் பாக்ஸில் வைத்து, நாகர்கோவில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அருகில் இருந்த என் அத்தானும், சாட்சிகளும் சத்தம் போட, மீண்டும் வெட்ட வந்த எதிரிகள் சென்று விட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நாகர்கோவில் திரவியம் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு தான் எனக்கு அறுவை சிகிச்சை மூலம் கையை மீண்டும் இணைத்தார்கள். வெட்டுப்பட்ட கை முழுவதுமாக பழைய நிலைக்கு வரவில்லை. என்னால் அந்த கையை வைத்து வேலை எதுவும் செய்ய முடியாது. நான் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, போலீசார் வந்து விசாரிக்க நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். கையால் எழுத முடியாத காரணத்தினால் கைரேகை வைத்தேன். புகார் வாக்குமூலத்தில் எனது அம்மா கொடிரோஜா அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1.** எதிரி செல்லக்குட்டி எனது அத்தான் சேர்மனிடம் பால் கறக்கும் வேலை செய்து கொண்டிருந்தார். சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பிருந்து தனியாக பால் வியாபாரம் செய்து வந்தார். எதிரி

அவரது சமுதாய மக்கள் உள்ள தெருவில் எங்களை பால் எடுக்கக்கூடாது என்று மிரட்டி வந்தார். அவ்வாறு பால் எடுத்தால் கொன்று விடுவேன் என்று மிரட்டி வந்தார். நாங்கள் ரூ.2/- அதிகம் கொடுத்து பால் வாங்கியதால் எதிரிகளின் சமுதாயத்தை சேர்ந்த மக்களும் எங்களிடம் தான் பால் விற்றார்கள். அதனால் எதிரிகளுக்கு எங்கள் மீது முன்விரோதம் ஏற்பட்டு, அதன் காரணமாக எங்களை தாக்கினார்கள். என்னிடம் காட்டப்படுவது தான் என்னை வெட்டப் பயன்படுத்திய அரிவாள் தான். அது **சா.பொ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.